(14) 206 -3-

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்குவதற்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.4.42 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சஉதி.3) துறை

அரசாணை (நிலை) எண்.31

நாள். 13–03–2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
மாசி மாதம் 30ம் நாள்

படிக்கப்பட்டது:-

அரசு ஆணை (நிலை) எண்.134, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 15.06.2010

---

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் 2010 – 2011 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 30,834 மாணவ / மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டுக்கள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்க ரூ.18.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. தற்போது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் சத்துணவு மையங்களில் உள்ள 7,367 பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கிட ஒரு பயனாளிகளுக்கு ரூ.60/– வீதம் 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.4.42 இலட்சம் செலவினம் ஒப்பளிப்பு கோரி சமூகநல இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

| வ.எண். | மாவட்டம் | தட்டு மற்றும் டம்ளர் வழங்க பரிந்துரைக்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1473 |
| 2 | திருவள்ளூர் | 1475 |
| 3 | சேலம் | 1473 |
| 4 | நாமக்கல் | 1473 |
| 5 | தருமபுரி | 1473 |
| | மொத்தம் | 7367 |

216

3. சமூக நல இயக்குநரின் கருத்துருவை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று மேலே பத்தி 2ல் தெரிவிக்கப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 7,367 மாணவ / மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்க 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.4.42 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2236–சத்துணவு 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் –102 மதிய உணவு I– திட்டத்தில் சேராதது AX – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமையல் பாத்திரங்களை மாற்றுதல் – 24 பொருள்களும் வழங்கலும்"

(த.தொ.கு2236–02–102–AX–2408)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு-I ல் பிரிவுக்கூறு 99ன்படி முன்பணமாக பெற்று சத்துணவு மைய மாணவ / மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க சமூகநல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் இச்செலவினத்தை சம்பளக் கணக்கு அலுவலரின் கணக்குடன் சரிகட்டப்பட்டு அரசுக்கு பயனீட்டுச் சான்றிதழை உடன் அனுப்பி வைக்க வேண்டும் என சமூக நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி ஊரக மற்றும் நகர்புற பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 7,367 மாணவ, மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க தேவைப்படும் நிதியை தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பிரித்து அளிக்கவும், இத்திட்ட செயலாக்கத்தை கண்காணிக்கவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

7. ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000ன் படி 2011 – 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், எவர்சில்வர் தட்டுக்கள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண். 13186/12, நாள் 08.03.2012 ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

சமூக நல இயக்குநர், சென்னை – 2.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.
சென்னை – 113.

217

மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
(காஞ்சிபுரம், திருவள்ளூர், சேலம், நாமக்கல், தருமபுரி)
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர்
(கிழக்கு,தெற்கு,மற்றும் வடக்கு)
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை / கோவை
உதவி சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 3
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 6/9/18/35.

நகல்

நிதி (சந) துறை, சென்னை – 600 009
ஊரகத் தொழில் துறை மற்றும் சத்துணவு அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (ச.ந.7)த் துறை, சென்னை –9.
அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை – 25.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

M. மணிமாறன்
பிரிவு அலுவலர் 13/3/12
13/3/12